பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே, 20 சதவிகிதம் மாணவர் சேர்க்கை சதவிகிதம் கூடுதலாகக் கொடுக்கப்பட்டு, அனைவரும் உயர் கல்வியைப் பெறுவதற்கான ஒரு சூழ்நிலையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது உருவாக்கித் தந்திருக்கிறது. அதற்கும்மேலாக, அந்தப் பகுதியிலுள்ள மாணாக்கர்கள் என்னென்ன பாடப் பிரிவுகள் படிக்க வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, அந்தப் பாடப் பிரிவுகளை முழுமையாக வழங்கியிருக்கிற அரசு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

மேலும், இந்த ஆண்டுகூட அவர் சார்ந்திருக்கின்ற திண்டிவனம் பகுதியில் கூடுதலாக எம்.ஏ. (தமிழ்), எம்.எஸ்.சி. (தாவரவியல்), எம்.ஏ. (ஆங்கிலம்), எம்.எஸ்.சி. (புவி அமைப்பியல்) என 4 P.G. Group–களை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் இன்றைக்குத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அவருடைய தொகுதியைச் சார்ந்த மாணாக்கர்கள், உயர் கல்வியைப் பெறுகின்ற வகையிலே, அம்மா அவர்களுடைய அரசானது தொடர்ந்து செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர், அங்கே தனியாக பெண்களுக்கென்று கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கோரியிருக்கின்றார்கள். எதிர்வரும் காலங்களில் அங்கே மாணவியர்களுடைய சேர்க்கை அதிகமாக இருக்கின்றபட்சத்தில், அதைப்பற்றி அரசானது பரிசீலிக்கும் என்று தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

196—

நெல் கொள்முதல் நிலையம்

***2801—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2017 ஜூலை 13]

(அ) திருவையாறு தொகுதி, புதுக்குடி, ஆவாரம்பட்டி மற்றும் சானூரப்பட்டி ஆகிய கிராமங்களில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) 2015–2016 நெல் கொள்முதல் பருவத்தில், விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, புதுக்குடி, சானூரப்பட்டி, ஆவாரம்பட்டி ஆகிய கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 2,294 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி நெல் கொள்முதல் நிலையங்கள், நெல் வரத்து இல்லாத காரணத்தால், பின்னர் மூடப்பட்டுள்ளன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட புதுக்குடி பகுதி, அதேபோல ஆவாரம்பட்டி பகுதி, சானூரப்பட்டி பகுதியில் தற்காலிகமாக தனியார் வாடகைக் கட்டடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கிவருகின்றன. குறுவை நெல் கொள்முதல் செய்கின்ற காலகட்டத்தில், அரசினால் கொள்முதல் செய்யப்பட்ட ஏராளமான நெல் பல நேரங்களில் மழையில் நனைந்து வீணாகின்றன. எனவே, அதற்காக அந்தப் பகுதிகளில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் அமைக்க அரசு புறம்போக்கு இடங்கள் இருக்கின்றன. அவற்றில் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, புதுக்குடியில், மேலத்திருவிழாப்பட்டி, கீழத்திருவிழாப்பட்டி, காமாட்சிபுரம், துருசுப்பட்டி போன்ற கிராமங்களில் விவசாயிகள் அதிகளவில் இருக்கிறார்கள். அதேபோல, ஆவாரம்பட்டி, முத்துவேலகண்டம்பட்டி, வீரமுரசன்பேட்டை, நந்தவனப்பட்டி*

[2017 ஜூலை 13

போன்ற 4 ஊராட்சிகளுக்கு மையப் பகுதியாக ஆவாரம்பட்டி இருக்கிறது. அதேபோல செங்கிப்பட்டி, நாச்சாம்பட்டி போன்ற ஊராட்சிகளுக்கு மையப் பகுதியாக சானூரப்பட்டி விளங்குகிறது. எனவே, அங்கு அந்தக் கட்டடங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், உணவு அமைச்சர்களாக இருந்த மாண்புமிகு திரு. நேரு அவர்களும், திரு. எ.வ. வேலு அவர்களும், திருவையாறு தொகுதிக்கு ஆண்டிற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் கொடுத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மூன்று கட்டடங்கள் கேட்டிருக்கிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர் என்றும் பாராமல், புறக்கணிக்காமல் அதில் ஒன்றாவது அந்தப் பகுதிக்குத் தருவார்களா என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தி.மு.க. ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர்கள் ஆண்டிற்கு ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் தந்தார்கள் என்று தெரிவித்து, இப்போது ஒன்றையாவது தருவீர்களா என்று கேட்டார்கள்.*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட 3 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கான கட்டடங்கள் இந்த ஆண்டே தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி என்று சொன்னால், அவர் கேட்ட அந்த புதுக்குடி, சானூரப்பட்டி, ஆவாரம்பட்டி ஆகிய மூன்று ஊர்களுக்கும் இடையிலே, கோட்டாரப்பட்டி என்ற இடத்தில், 40 இலட்சம் ரூபாய் செலவில் இப்போது ஒரு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திருவையாறு சட்டமன்றத் தொகுதியில், கடந்த 6 வருடங்களில் பெரமூர், அரசகுடி, பவனமங்கலம், பனவெளி, மருதக்குடி ஆகிய 5 இடங்களில் ஒரு கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் நேரடி

2017 ஜூலை 13]

நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், ராயப்பேட்டை, நாகத்தி ஆகிய 2 இடங்களில் 65 இலட்சம் ரூபாய் செலவில் நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணியினைத் துவக்கநடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.எனவே,மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்குரிய இடத்தினைக் கண்டறிந்து தந்தால், புறம்போக்கு நிலமாகவோ அல்லது விவசாயிகள் தாமாக முன்வந்து தானமாகவோ நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொடுக்கின்றபட்சத்தில், உடனடியாக அந்த இடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, புதிய கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மூன்று இடங்களில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து அந்தந்த ஊர்களிலே உள்ள மக்களிடம் பேசி, நிச்சயமாகப் பெற்றுத் தருகிறேன் என்று சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டித் தருவதாக அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களை வணங்குகின்றேன். அறுவடை காலங்களில் அறுவடை செய்த நெல்லை உடனே விற்றுவிடாமல் இருப்பு வைத்திருந்து, தனது செலவுக்கு தேவையின்போது நெல்லை விற்கவேண்டிய நிலை வருகின்றபோது, தனியாரிடத்தில் குறைந்த விலைக்கு நெல்லை விற்றுவிட்டு, பணத்திற்காக மாதக் கணக்கில் அலைகின்ற நிலை வருகின்றது. இந்த நிலையில் விவசாயிகள் கஷ்டத்தைப் போக்கிட, பருவ காலங்களில் மட்டும் இயங்குகின்ற நெல் கொள்முதல் நிலையங்களைப்போல் அல்லாமல், திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளியில் ஆண்டு முழுவதும் இயங்குகின்ற நெல் கொள்முதல் நிலையத்தைப் போன்று, லால்குடி தொகுதியில்,*

லால்குடியில் ஆண்டு முழுவதும் இயங்குகின்ற நெல் கொள்முதல் நிலையம் ஒன்று தொடங்கவேண்டும்.

தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள் நீங்கலாக, பிற மாவட்டங்களில் இயங்குகின்ற நெல் கொள்முதல் நிலையங்கள் தனியார்மயமாக்கப்படவுள்ளதை தவிர்த்திடவேண்டுமென்றும் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள், ஏதோ நெல் கொள்முதல் நிலையங்களைத் தனியார்மயமாக்குவது போன்ற கருத்தை இங்கே சொன்னார். அதேபோன்று, லால்குடி பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை எல்லாக் காலங்களிலும் செயல்படுத்த வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தார். எல்லாக் காலங்களிலும் நெல் வரத்து அந்தப் பகுதியில் இருந்தால்தான், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை அங்கு தொடர்ந்து செயல்படுத்த முடியும். ஏனென்றால், ஒரு நெல் கொள்முதல் நிலையத்தை நடத்துவதற்கு Bill Clerk, Watchman, Helper ஆகிய 3 பணியாளர்கள் தேவை. அதுமட்டுமல்லாமல், மற்ற செலவுகளையெல்லாம் சேர்த்து, ஒரு நெல் கொள்முதல் நிலையம் இயங்குவதற்கு மாதத்திற்கு ரூ.25,000/— செலவாகிறது. அந்த செலவுகளைக் கருத்திற்கொண்டும், விவசாயிகளின் நலனைக் கருதியும், நெல் வரத்து தொடர்ந்து இருக்குமேயானால், அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், எல்லாக் காலங்களிலும் இயங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, டெல்டா மாவட்டங்கள் அல்லாத மற்ற மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்குத் தனியாருக்கு வாய்ப்பளிக்கப் போவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது தவறான செய்தி; அதுபோன்ற

2017 ஜுலை 13]

நிலை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

ஏற்றுமதி மையம்

***7091—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் கைத்தறி நெசவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரையில் கைத்தறி நெசவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். மதுரை மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ளூர் சந்தையில் விற்பனையாகும் கைத்தறித் துணி இரகங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்கு, சுங்கிடிச் சேலைகள், செயற்கை பட்டுச் சேலைகள், லுங்கிகள், கோடம்பாக்கம் சேலைகள், தேவேந்திரா சேலைகள், காட்டன் வேஷ்டிகள் இதுபோன்ற இரகங்கள் மட்டுமே மதுரை தெற்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கைத்தறி சங்கங்களில் உற்பத்தியாகி வருகின்றன. இவையனைத்தும் உள்ளூர் விற்பனைக்கான பொருட்களாக இருக்கின்றன. எனவே, ஏற்றுமதி செய்வதற்கு ஒரு மையத்தை அங்கே அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கைத்தறி இரகங்களை சிறப்பாக விற்பதற்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம்மூலம் ஆன்லைன் வர்த்தகம், ஏற்றுமதி விற்பனையை